★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

திமுகத்தின் இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆனி 27உ செவ்வாய் (10—7—56) ★ ★ வெளியூர்: ஆனி 28உ புதன் (11—7—56) [இதழ் 22

இது என்ன குழப்பம்?

ரோம், ஜூலை 9—

சிசிலியைச் சேர்ந்த அண்டோனியன் டாமிகோ என்ற பெண்மணியின் உயரம் 5 அடியிலிருந்து 3 அடி 3 அங்குலமாக குறைந்து விட்டதாக ஒரு டாக்டர் அறிவித்திருக்கிறார்.

10 வயதில் அவள் உயரம் 5 அடியாக இருந்ததாகவும் 10 வயதானவுடன் அவள் உடல் வளர்ச்சி நின்று விட்டதாகவும், கால்கள் மெலிந்து குட்டையாகிவிட்டதாகவும் அந்த டாக்டர் அறிவித்திருக்கிறார்.

டில்லியின் புதிய ஜவுளிக் கொள்கை:

கைத்தறிகளை அடியோடு ஒழிக்கவா?

விசைத்தறிகளைப் புகுத்துவது இலட்சக்கணக்கான கைத்தறியாளரைப் பட்டினிபோடும்

சமூக அமைதியைக் கெடுக்க வேண்டாம் என எச்சரிக்கை

கைத்தறி நெசவாளர் சங்கத்தவர் குரல்

பம்பாய், ஜூலை 9—

'விசைத் தறிகளைப் புகுத்துவது வேகமாக ஆபத்தினைப் பரப்புவதைப் போலாகும். கைத்தறிக்கு ஆபத்து மிகுந்த போட்டியாக விளங்குவதும் இந்த விசைத்தறிகளே' என்று கைத்தறியாளர் குரல் கொடுத்துக் கொண்டிருக்கும் போது, டில்லி சர்க்கார், புதிய ஜவுளிக் கொள்கை என்ற பெயரில், விசைத்தறிகளை வேகமாகப் புகுத்துவதற்குத் திட்டமிட்டிருக்கின்றனர்.

இந்தத் திட்டத்திற்கு சென்னை உட்பட பல மாநில கைத்தறியாளர் சங்கத்தவரும் பலந்த கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள். புதிய ஜவுளிக் கொள்கை கைத்தறியை ஒழிக்கவா என்று அவர்கள் குரல் எழுப்பியுள்ளார்கள்.

இந்திய சர்க்காரின் மாற்றியமைக்கப்பட்ட ஜவுளித் தொழில் கொள்கை கைத்தறித் தொழிலைப் பெருமளவுக்கு முடமாக்கிவிடும் எனவும் அதிக அளவில் பலர் வேலையிழக்கக்கூடும் எனவும் அகில இந்திய கைத்தறி போர்டு உறுப்பினர் ஐவர் ஆட்சேபணை தெரிவித்திருக்கின்றனர் எனத் தெரிய வருகிறது.

எம். பி. நாச்சி முத்து, எம் சோமப்பா, நவாப் அஜியாஸ்ரசூல், டி. ராமகார்தாராவ், லட்சுமண்பாபுஜி கொண்டா என்ற அந்த ஐவரும் இந்தப் புதுக்கொள்கையினால் விளையும் கேடுகளை விளக்கியிருக்கிறார்கள்.

புது ஜவுளிக் கொள்கைப்படி கைத்தறித் துறையில், விசைத்தறியைப் புகுத்த உத்தேசித்திருப்பதை ஆட்சேபித்து அவர்கள் கூறியதாவது:—

"இந்தக் கொள்கையைஅமுல் செய்வதனால்,இந்திய கிராமங்களில், வியாபித்து இருப்பதும், நன்கு நிலை நின்றிருப்பதுமான குடிசைத் தொழிலுமான கைத்தறித் தொழில் இந்தியாவைவிட்டு ஒழிந்தே போகும்; லட்சக்கணக்கானவர்கள் வேலை இழப்பர்; இதனால் சமூக அமைதி குலையும்."

'வேட்டு முறை போராட்டம் வெற்றி பெற முடியாது'

மலேயா சுதந்திரப் போராட்டம் திசை மாறும்?

"மலேயா மக்கள், சீனர், இந்தியர், ஆங்கிலேயர் ஆகிய பல்வேறு இனக் கலப்புள்ள மக்களின் மாறுபட்ட ஆசாபாசங்களின் விளைவாக மலேயாவில் ஆயுதமேந்திப் புரட்சி செய்யும் சுதந்திரவாதிகளின் முயற்சி பலிப்பதற்கில்லை. அவர்கள் மேற்கொண்டுள்ள முறை, பேராபத்தும் தோல்வியும் சூழவைத்துவிடக்கூடும்" என்று, மலேயாவில் நடக்கும் விடுதலைப் போராட்டங்கள் குறித்து, சிங்கப்பூர் இடதுசாரி மக்கள் கட்சித் தலைவர் லீ குவான்யீ தனது கட்சியின் வருடாந்திர மாநாட்டில் பேசுகையில் சொன்னார்.

மேலும் அவர் குறிப்பிட்டார். சுதந்திரப் போராட்டம் வெற்றியுற, சட்ட ரீதியான ஜனநாயக முறைகளில் செல்வதே பலனளிக்கும். ஆங்கில எசமானர்கள் நம்முடைய மக்கள் உழைப்பினால் ஏற்படும் பலன்களை கடலுக்கப்பால் கடத்திக்கொண்டுபோக விடக்கூடாது.

சுதந்திர — ஜனநாயக — கம்யூனிஸ்டுகள் தொடர்பற்ற—மலேயாவைச் சிருஷ்டிக்க வேண்டுமென அந்த மாநாட்டில் உறுதி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதாம்.

காங்கிரஸ் தலைவர்கள் செத்தாலொழிய சீர்படாது

நேபாளத்தில் குமுறல் நிலைமை!

"நீங்கள் சுடப்பட்டோ அல்லது குத்திப் படுகாயப்படுத்தியோ கொல்லப்பட்டாலொழிய இந்த நாட்டில், நீதி, அமைதி, நிரந்தர சுபீட்சம் ஆகியவைகள் நிலைநிறுத்தப்பட முடியாது. அதற்கான காலம் கனிந்துவிட்டிருக்கிறது,"

என்பனபோன்ற வாசகங்களுடன்; நேபாளப் பிரதமருக்கு அநேக பயமுறுத்தல் கடிதங்கள் கிடைத்து வருகின்றனவாம்!

நேபாளிய காங்கிரஸ் தலைவர், மற்றும் சில காங்கிரஸ்காரர்களுக்குக் கிடைத்துவரும் பயமுறுத்தல் கடிதங்கள், ஆங்கிலத்தில் 'டைப்' அடிக்கப்பட்டும் அதனை எழுதியவர்கள், தங்களை காலாகாலத்தில் எச்சரிக்கும் நாட்டுப் பற்று மிக்கோர் எனவும் கூறிக்கொள்கின்றனராம்—கடிதத்தில்!

கனரக இயந்திரத் தொழில் நிறுவ

ரஷ்ய நிபுணர்கள் வருகை

புதுடில்லி, ஜூலை 9—

இந்தியாவில் கனரக இயந்திர சாதனத் தொழிற்சாலையை நிறுவுவதற்காக நிலைமையை அறிய இந்திய சர்க்கார் அழைப்பின் பேரில் 4 பேர் கொண்ட ரஷ்ய நிபுணர் குழு ஒன்று இங்குவந்து சேர்ந்துள்ளது.

குருஷ்சேவ் கூட்டம் பற்றி திருமதி ட்ராட்ஸ்கி

நியூயார்க், ஜூலை 8—

பெருத்த அதிருப்தியிலிருந்தும் வெறுப்பிலிருந்தும், இப்போதுள்ள ரஷ்யத் தலைவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவே ஸ்டாலின் ஒழிப்புப் படலம் நடைபெற்று வருவதாக, ட்ராட்ஸ்கியின் மனைவியார் இங்கு தெரிவித்திருக்கிறார்.

லெனினது நெருங்கிய கூட்டாளியான ட்ராட்ஸ்கி, ரஷ்யாவிலிருந்து வெளியேறி அமெரிக்காவில் வசித்துக் கொண்டிருந்தபோது, மெக்சிக்கோவில் கொல்லப்பட்டது தெரிந்ததே.

ஸ்டாலின் ஆட்சி தோல்வியடைந்ததற்கு யார் மீது பழி சுமத்தலாம் என்ற முயற்சியில் இந்தக் காரியம் நடைபெறுவதாகவும், திருமதி ட்ராட்ஸ்கி தெரிவித்திருக்கிறாராம்.

கம்யூனிஸ்டு கட்சிக் காரியதரிசி குருஷ்சேவ், மற்றும் அவருடைய சகாக்கள் எல்லாம் ஒன்றும் இல்லாத வெறும் வெட்டிப் பேர்வழிகள் என்றும், இந்தத் தலைமை அதிக காலம் நீடிக்காது என்றும் அவர் கூறியிருக்கிறாராம்.

காமன்வெல்த் மாநாடு பற்றி

மாஸ்கோ வானொலி

லண்டன், ஜூலை 9—

லண்டனில் நடைபெற்ற காமன்வெல்த் பிரதமர்கள் மாநாடு உலக விவகாரங்கள் எதிலும், ஒரு உருப்படியான முடிவுக்கு வரவில்லை என்றும் இதற்குக் காரணம் அவ்விவகாரங்களில் எல்லாம், காமன்வெல்த் அமைப்பிற்குட்பட்ட நாடுகளின் போக்கு வெவ்வேறாக இருப்பதுதான் என்றும் மாஸ்கோ வானொலி நிலையம் குறிப்பிட்டிருக்கிறது.

ரஷ்ய ஆயுதக் குறைப்பை காமன்வெல்த் பிரதமர்கள் வரவேற்ற போதிலும், தங்கள் தங்கள் நாட்டு ஆயுதக் குறைப்புக் குறித்து எதும் திட்டமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றும் வானொலி கூறியது.

மக்கட் தொகைப் பெருக்கம்

பிரிட்டிஷ் பேராசிரியர் கருத்து

ஆக்ஸ்போர்டு, ஜூலை 9—

இப்போதைய விகிதத்திலேயே மக்கட் தொகைப் பெருக்கம் நீடிக்குமானால், இன்னும் 900 ஆண்டுகளில், உலகில் நிற்பதற்குத்தான் இடமிருக்கும் என்று மாஞ்சேஸ்டர் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஆர்தர் லூயி என்பார் தெரிவித்திருக்கிறார்.

நில நடுக்கத்திற்கு 40 பேர் பலி!

கிரீசைச் சேர்ந்த சன்டரின் எனும் தீவில் ஏற்பட்ட பெரும் பூகம்பம் ஒன்றின் விளைவாக, பலர் இறந்துபட்டனர் என்றும், அப்பகுதியிலுள்ள வீடுகளில் 40 சதவிகிதம் சரிந்து இடிந்துவிட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சன்டரின் தீவு, எரிமலைகளால் சூழப்பட்டிருக்கிறது இங்கு மட்டுமல்லாமல், இங்கிருந்து 100 கல் தொலைவிற்கு அப்பாலுள்ள ஏதன்ஸ் நகரத்தில்கூட அதிர்ச்சி ஏற்பட்டதென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வீடுகள் இடிந்து விழுந்ததால் சுமார் 40 பேர்வரை மாண்டனர் என்று அதிகாரபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

யுத்தத்தின் கொடிய விளைவுகள்

16,000 ஜப்பானியர் குளிருக்கும் பட்டினிக்கும் பலி!

டோக்கியோ, ஜூலை 8—

பசிபிக் யுத்த முடிவில், மஞ்சூரியாவிலிருந்த சுமார் 16,000 ஜப்பானிய அகதிகள் மாண்டதாக ஜப்பானிய சர்க்கார் க்ஷேம நல இலாகாவினர் அறிவித்திருக்கின்றனர்.

இவர்களில் பலர் பசியினாலும், குளிரினாலும், இறந்துபட்டனர் என்றும், ரஷ்ய, சீனப் படையினராலும் இவர்களில் பலர் இறந்துபட்டனர் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

பெண்கள் கற்பழிக்கப்பட்டு கொல்லப்பட்டதாகவும், குழந்தைகள் பட்டினி கிடந்து சாகுமாறு விடப்பட்டதாகவும் ஜப்பான் சர்க்கார் வெளியிட்டுள்ள ஒரு தஸ்தாவேஜிலிருந்து தெரிய வருகிறது.

குற்றாலத்தில் ஒரு கிராம பல்கலைக் கழகம்

கருமுத்து முயற்சி

குற்றாலம் ஜூலை 7—

குற்றாலத்தில் கிராமப் பல்கலைக் கழகம் ஒன்றைத்தான் நிறுவத் திட்டமிட்டிருப்பதாயும், அதற்குத் தான் போதுமான பண உதவிகள் அத்தனையும் செய்யவிருப்பதாகவும், மதுரை கருமுத்து தியாகராச (செட்டியார்) இங்கு கூறியிருக்கிறார்.

இவர் ஏற்கனவே மதுரையில் ஒரு முதல்தரக் கல்லூரியைத் துவக்கி நடத்திவருகிறார்.

ஒரு அடிப்படை தொழில் பயிற்சி நிலையமாக குற்றாலத்தை ஆக்கவேண்டும் என்றும், கல்லூரியில் பயின்று படிப்பு முடிவுற்றதும்; இளைஞர்களுக்கு சிவில், மின்சார, விவசாய, வர்த்தகத் தொழில் துறைகளில் பயிற்சியளிக்க வேண்டுமென்பதும், அவர் விருப்பம் என்றும் அவர் கூறியிருக்கிறாராம்.

அனுமந்தையாவை வீழ்த்த!

புதுடில்லி, ஜூலை 10—

மைசூர் மாநில முதலமைச்சர் அனுமந்தையாமீது நம்பிக்கையின்மை தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று கொண்டுவருவதற்காக நடைபெற்று வருகின்ற முயற்சிகள் குறித்து, பிரதேசக் காங்கிரஸ் தலைவரான எஸ். சென்னையா வுடன், அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் தேபர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் மாதவன் ஆகியோர் விவாதித்தனர் என்று தெரிகின்றது.

காங்கிரஸ் தலைமையின் அழைப்பின் பேரில் சென்னையா டில்லி சென்று, மாநிலத்திலுள்ள அரசியல் நிலைகளை விளக்கியிருக்கிறார் என்றும் தெரிகிறது.

தென் நாடு

சென்னை 10—7—'56 செவ்வாய்

மறுக்கொணாத உண்மை!

☆

"தென்னாடு தொழில்துறை முன்னேற்றத்தில் (வடநாட்டை விட) மிகப் பின்தங்கிக் கிடக்கிறது என்பதில் கருத்து வேறுபாடே இருக்க முடியாது" என்று தூத்துக்குடியில் பேசியிருக்கிறார் கனம் நிதியமைச்சர் சுப்ரமணியனார்.

'இது வெறும் பிரச்சாரத்திற்காக எழுப்பப்படும் கோஷம் அல்ல; மாறாக மத்திய நிதியமைச்சரே ஒப்புக் கொண்டிருக்கிற மறுக்கொணாத உண்மையாகும்' என்றும் உறுதி செய்திருக்கிறார், கனம் மந்திரி.

தொழில்துறை அபிவிருத்தியில் தென்னாடு பின்தங்கிக்கிடக்கிறது என்ற மறுக்கொணாத உண்மையை கனம் நிதிமந்திரி வாய்மூலம் கேட்பதில், மக்களில் கூர்ந்தமதி படைத்தோருக்குச் சற்று வியப்பாகக்கூட இருக்கலாம்.

இந்திய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, இந்தியாவின் செல்வம் பெருக வேண்டும். செல்வத்தைப் பெருக்க உற்பத்தித் அதிகரிக்க வேண்டும். உற்பத்தி அதிகரிக்க தொழில்கள் பெருக வேண்டும்; இந்தியாவில் இல்லாத தொழிற்சாலையே இல்லை என்ற அபிவிருத்தி ஏற்பட வேண்டும். அதற்குத்தான் இந்த ஐந்தாண்டுத் திட்டங்கள் என்று கூறி, டில்லி ஏகாதிபத்தியவாதிகள் கடந்த எட்டாண்டுகளில், வடநாட்டைத் தொழில்மயமாக்கி வருவதையும், தென்னாட்டை நிரந்தரமான விவசாயக் காடாகவே வைத்திருக்கத் திட்டமிட்டிருப்பதையும், நாடு நன்கறியும்.

'அகில இந்தியா'விற்குமான திட்டங்கள், வடநாட்டின் வளம் பெருக மட்டுமே என்ற நிலை இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திலும் உறுதி செய்யப்பட்டுள்ளதும் மறுக்கொணாத உண்மையாகும்.

தொழில் துறை அபிவிருத்தியில் தென்னாடு பின்தங்கிக் கிடக்கிறது என்ற மறுக்கொணாத உண்மை, இந்த நிலைக்குக் காரணம் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளுவதற்கான அதிகாரங்களைப் பதுக்கி வைத்துக்கொண்டிருக்கும் வடநாட்டவரின் ஏகாதிபத்திய நோக்கம்தான் என்ற உண்மையையும் உள்ளடக்கியது என்பதைத்தான், ஐந்தாண்டுத் திட்டங்கள் வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன.

கனம் நிதியமைச்சர், இந்த உண்மையை முன்பொருமுறை ஒப்பினார். பின்பு, 'அதிகாரபூர்வமாக நான் கூறுகிறேன், ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்படவில்லை' என்று முன் சொன்னதை விழுங்கிவிட்டு முழுப் பொய் பேசினார்.

பின்னர், இரண்டாம் திட்டத்தில் எல்லாம் சரியாகி விடும் என்று தோள் தட்டினர். தோல்வியை அணைத்துக்கொண்டு டில்லியிலிருந்து திரும்பினர். இடையிடையே, வடநாடு தென்னாடு என்ற இயற்கையான வேற்றுமையை மூடி மறைக்கவும் தனது வடநாட்டு எஜமானர்களைக் காப்பாற்றவும் என்று கருதிக்கொண்டு; ஐந்தாண்டுத் திட்டத்தில், இன்னும் போகப் போக நமக்கு அதிகமான தொகை கிடைக்கலாம். நமது திட்டம் எத்தனை பெரியதானாலும், நாம்தானே பணம் திரட்டியாக வேண்டும்' என்று சமாதானம் கூறும் முயற்சியில் ஈடுபட்டார். என்றாலும் வடநாடு வளர்கிறது, கொழுக்கிறது தென்னாடு தேய்கிறது—தேய்புகிறது என்ற மறுக்கொணாத உண்மையை அவரால் மறுத்திட முடியவில்லை. தூத்துக்குடியில், புதிதாக ஞானோதயம் பெற்றவர்போல உண்மையை ஒப்புக்கொண்டு பேசியிருக்கிறார்.

பல முறைகள் இந்த மறைக்கொணாத உண்மையை மறைக்க முயன்ற மந்திரியின் வஞ்சகச் செயலை மக்கள் மறந்துவிட மாட்டார்கள். இப்போது, தேர்தல் நெருங்குகிற இந்த நேரத்தில் இவர் உண்மைக்கு வெளிச்சம் போட்டுக்காட்ட முனைந்திருப்பதே, மக்களின் அனுதாபத்தைப் பெறத்தானோ என்று வியமான போக்குடைய சிலர் சந்தேகிப்பதில் தவறும் இருக்க முடியாது.

இவர் ஒப்பி உரைத்திருக்கிற உண்மையை, மூடி மறைக்க இன்னும் நினைக்கும் சில 'முற்போககாளர்'களும, தென்னாட்டு மக்களின் கூரிய பார்வையிலிருந்து தப்பிவிட மாட்டார்கள்.

மந்திரி தென்னாடு தொழில் துறையில் அபிவிருத்தியடைய கூறியுள்ள 'வழி' பற்றிப் பிறிதோர் முறை ஆராய்வோம்.

அதற்கிடையில், மறுக்கொணாத உண்மையை, மீண்டும மறுத்துரைக்க 'சுப்பிரமணியங்கள்' கிளம்பாமலிருக்க வேண்டும்.

கொல்லப்படுவது தெரியாமல் அணுஅணுவாய் கொல்ல வேண்டுமாம்

இந்திப் பிரசாரகர்களுக்கு குடியரசுத் தலைவர் யோசனை

அகில இந்திய மொழி இந்திதானும்!

அன்னிய மொழி நீடிப்பது சுதந்திரம் முழுமையற்றது என்பதன் பொருளாம்!

"இந்தி வழங்காத பகுதிகளில் இந்தி பிரச்சாரவேலை செய்வது பிரதேச மொழிகளின் இடத்தை ஆக்கிரமித்துக் கொள்வதற்காக அல்ல; உண்மையில் பிரதேச மொழிகளுடையவும் இந்தியினுடையவும் இடங்கள் வெவ்வேறுகும. இவை இரண்டுக்குமிடையே போட்டி ஏற்படுவதற்கு சந்தர்ப்பமே கிடையாது.

"ஏதாவது போட்டி ஏற்படுமானல் அது, இந்தி உள்பட எல்லா மொழிகளையும் அபிவிருத்தி செய்வதிலும் இலக்கியங்களை வளப்படுத்துவதிலும்தான் இருக்கமுடியும்.

"இந்தி பரவவேண்டும் என்பதற்கு முக்கியத்துவம் தருவதற்குக் காரணம், அதற்கு அகில இந்திய முக்கியத்துவமும், மாநிலங்களுக்கிடையே உபயோகப்படும் முக்கியத்துவமும் இருப்பதுதான்.

"இந்தப் பெரிய நாட்டின்(!) பல வேறு பகுதிகளுக்குமிடையில் ஒரு ஒற்றுமை உணர்வை ஊட்டவும், கூட்டுறவை வளர்க்கவும், பல மாநிலங்களையும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பு கொண்டதாக ஆக்கவும், ஒரு அகில இந்திய மொழி தேவைப்படுகிறது. இந்தக் காரணமும் இந்திப் பிரச்சாரத்திற்கு ஆதரவாக அமைகிறது.

"இந்தி மொழிக்குத் தரப்படுகிற முக்கியத்துவத்தை சில பிரதேசங்களில் உள்ளவர்கள் தவறாக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை ஒப்பித்தாகவேண்டும்.

"நான் உறுதிகூற விரும்புவதெல்லாம், இந்தி, பிரதேச மொழிகளுக்குரிய இடத்தினை ஆக்கிரமிக்காது என்பதுதான்.

"ஆனால், இந்தி வழங்காத பகுதிகளில் உள்ள மக்களுக்கு இதனல் பல கஷ்டங்கள் ஏற்படும் என்பதையும் மறுப்பதற்கில்லை.

"இந்தக் கஷ்டங்களை எப்படிப் போக்குவது—எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்பதால் இந்தி கற்றுக்கொள்வதில் இந்தியைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்களை எப்படிப் போக்குவது—அவைபவை, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளாகும.

"அகில இந்திய ரீதியில், சர்க்கார் வேலைகளுக்கோ அல்லது வேறெந்தக் காரியங்களுக்கோ நாம் ஒரு அன்னியமொழியை நம்பியிருக்கும்வரை, நாம், நமது சுதந்திரம் முழுமை பெற்றதாகக் கொள்வதற்கில்லை. இந்த நாட்டில் அகில இந்திய வேலைகளுக்கு ஒரு அன்னிய மொழி ஏன் உபயோகிக்கப்பட வேண்டும்?

இந்தி அகில இந்திய மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. மக்கள் சபையிலோ, தலைமை உயர்நீதி மன்றத்திலோ, இனி ஆங்கிலம் தேவை இல்லை; இந்தியேபோதும் என்ற நிலை வரத்தான்போகிறது.

"என்றாலும இந்திப் பிரியர்கள், இந்திக்கு எதிரான சூழ்நிலையை, விவேகமற்ற முறையில் பேசுவதின் மூலம் உண்டாக்கிவிடக் கூடாது என்றும் எச்சரிக்க விரும்புகிறேன்.

"இந்தி பேசாத மக்களிடை இந்தி திணிக்கப்படுகிறது என்ற எண்ணத்தை ஊட்டுகிற வகையில், இந்தி பேசும் மக்கள் ஒரு வார்த்தைகூட தவறியும உதிர்த்துவிடக் கூடாது. நாட்டு நலன் கருதி, இந்தியைக் கற்றுக்கொள்ளுமாறு மிகப் பணிவுடன் வேண்டிக்கொள்ள மட்டுமே செய்யவேண்டும,"

—என்று, குடியரசுத் தலைவர் டாக்டர் ராசேந்திர பிரசாத் அவர்கள் ஐதராபாதிலே, இந்திப் பிரச்சார சம்மேளனம ஒன்றைத் துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது:—

"தென்னாப்பிரிக்காவில் காந்தியார், இந்தி தெரிந்தவர்களும் தெரியாதவர்களுமான மக்களிடை வேலை செய்ததின் விளைவாக அகில இந்திய மொழி வேண்டும் என்ற அவசியத்தை உணர்ந்தார். அது இந்தியாக இருக்க வேண்டுமென தீர்மானித்தார். எனவே அவர் சாம்பரானில் வேலை துவங்கியபோது இந்தியைப் பரப்புவதற்கென 1917-ம் ஆண்டில் தென்னாட்டிற்கு தேவதாஸ் காந்தி மற்றும் 'சுவாமி' சத்தியதேவ் ஆகியோரை அனுப்பி வைத்தார் பீகாரிலிருந்தும உத்தரப் பிரதேசத்திலிருந்தும், பல இளைஞர்கள் இந்தி பிரச்சாரத்திற்காகத் தென்னாடு வந்துள்ளார்கள்.

"இன்று தென்னாட்டில் இந்திக்கு எதிராகக் கேட்கும் குரல் எல்லாம் ஒன்று இல்லை; இந்தியை எல்லோரும் வரவேற்கிறார்கள்.

"தென்னாட்டு மக்கள் இந்தியைக் கற்றுக்கொண்டு, தாங்களே இந்தி பரப்பும் வேலையில் ஈடுபட்ட போது, வடநாட்டிலிருந்து இந்திப் பிரச்சாரத்திற்காக, ஆசிரியர்கள் மட்டுமின்றி, பணமும் வருவது, தேவையில்லாது போய்விட்டது.

"இன்று எண்ணற்றவர்கள்—ஆண்கள் பெண்கள் வாலிபர்கள் பெரியவர்கள் பல வகுப்பினர்—இந்தி கற்றுக்கொண்டிருக்கிறார்கள்."

'ஒவ்வொருவரின் தாய் மொழியே ஆட்சி மொழியாக வேண்டும்'

'உண்மை சுதந்திரம் என்பது அதுதான்'!

ஆச்சாரியா வினோபா பாவே கருத்து

"........மொழிவாரி மாகாண அமைப்பு மக்களுக்கு நல்லது தான். அம்மாதிரி மொழிவழி மாநிலங்கள் அமையாவிட்டால், உண்மையான சுதந்திரம் நாட்டில் இல்லையென்று கூடச் சொல்வேன்.

"குடியானவர் பேசும் மொழியில் வழக்கு மன்றத்தில் குறிப்புகள் எழுதப்படாவிட்டால்—தீர்ப்புகள் வழங்கப்படாவிட்டால், உண்மைச் சுதந்திரம் இல்லை என்றே எடுத்துரைப்பேன்.

"சுயராஜ்யம் என்று சொன்னால், அந்தந்த மாநிலத்தில் மாநில மக்கள் மொழியிலேயே எல்லா நடவடிக்கைகளும் பெற வேண்டும்,"

என்று, ஆச்சாரியா வினோபா பாவே கடலூர் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்

10 கோடி ஆண்டுகட்குமுன்னைய பறக்கும் பாம்பு!

ரியோடிஜெனீரோ, ஜூலை 8—

10 கோடி ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்ததாகக் கருதப்படும் பறக்கும் பாம்பு ஒன்றின் சின்னங்களை பிரெஞ்சுப் பகுதியில் ஆராய்ச்சியாளர் ஒருவர் கண்டுபிடித்திருக்கிறாராம்.

நெய்வேலித் திட்டம் என்ன ஆயிற்று?

சேலம்இரும்புக்கனி உலையேறுமா?

மந்திரி டி.டி. கிருஷ்ணமாச்சாரி கூறும் சமாதானம்

நெய்வேலித் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டு, மத்திய தொழில் வர்த்தக மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறியதாவது:—

"இத்திட்டப் பொறுப்பு இப்போது என் வசமில்லை.

"தற்போது நெய்வேலியில் நடைபெறும் தண்ணீர் இறைப்புப் பரிசோதனைகள், தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன. ஆறு தண்ணீர் இறைக்கும் பம்புகள் கோளாறு அடைந்திருப்பதே இதற்குக் காரணம. இந்தச் சிறு தடங்கலை எல்லாம் பொருட்படுத்தாமல், திட்டத்தை மேலும் நீடித்து நடத்தலாமெனப் பரிசோதனைகள் கூறுகின்றன. அபாய அளவைவிட வெகு குறைவாக நீர் மட்டம் குறைந்துவிட்டதால், திறந்தவெளி 'குவாரி' முறையில், இப்போது அங்கு நிலக்கரியை வெட்டி எடுக்கலாம்.

"ஒரு உரத் தொழிற்சாலையையும், இத்திட்டத்துடன் இணைத்துத் துவக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

"தேன் இரும்பு அல்லது உருக்குத் தொழிற்சாலை ஒன்றையும் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்க சாத்தியப்படலாம். இவை எல்லாம் சாத்தியக் கூறுகள்தான்; இப்போதே முடிவு கூற முடியாது."

நெய்வேலித் திட்டத்துடன் இணைப்பாக சேலத்தில் கிடைக்கும் இரும்புக் கனிப் பொருளைக் கொண்டு ஒரு இரும்புத் தொழிற்சாலை அமைக்கவேண்டும் என்ற கோரிக்கை பற்றி அவர் குறிப்பிடும்போது, 'தாழ்வான உலைகள் பற்றி ஆராய எம். எஸ். தக்கர் என்பார் தலைமையில் ஒரு கோஷ்டி கிழக்கு ஜெர்மனிக்குப் போயிருக்கிறது நெய்வேலித் திட்டம் வெற்றியடைந்தால் தான் மலிவான விலையில் நிலக்கரி கிடைப்பது சாத்தியமாகும். நெய்வேலியில் திட்டம் பூர்த்தியாகி, என்று வேலை துவங்குவது என்பது இன்னும் முடிவாகவில்லை; பரிசோதனைகள் முடிந்ததும் இந்தத் தேதி குறிப்பிடப்படலாம்," என்றும் கூறியிருக்கிறார்.

உங்கள் குறிப்புக்கு!

அவசியமானல், மாவட்டத் தலைநகர்களில் நியாய விலைக் கடைகளைத் திறக்கும் பிரச்சினை சென்னை சர்க்காரின் கவனத்திலிருக்கிறதாம்!

வாழ்க்கைக்குத் தேவையான உணவுப் பொருள்களின் விலை உயர்வு நிலைமைகளை உன்னிப்பாகக் கவனித்து வருகின்றனராம்!

விலை உயர்வுப் பிரச்சினையில், ஏழைகள்—நடுத்தர வகுப்பினருக்கு உதவுவதற்கான அவசியமான நடவடிக்கைகள் எல்லாம் மேற்கொள்ளப்படக் கூடுமாம்!

‘நமக்கு முழு உரிமை இருந்தால் இலங்கைத் தமிழர் அவதி துடைக்க முடியாதா?’

‘சக்தியற்றக் காமராசர் சர்க்கார் நாம் தந்த சக்தியையும் காப்பாற்றிக் கொள்ளவில்லையே!’

துணைப் பொதுச்செயலாளர் விளக்கம்

தி. மு. கழகத் துணைப்பொதுச்செயலாளர் தோழர் என். வி நடராசன் அவர்கள், சென்னை கோகலே மண்டபத்தில், சென்ற 6—7—56 அன்று மாலை நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

“இலங்கையில் தமிழர்கள் இன்று படுகிற அவதி சொல்லுந் தரமன்று என்பதை எனக்கு முன் பேசியவர்கள் விளக்கினார்கள். ‘தமிழர்தலையை வெட்டிக் கொல்லுகிறார்கள்; சுட்டுத் தள்ளுகிறார்கள்; கடைகளைச் சூறையாடுகிறார்கள்; பெண்களை அவமானப்படுத்துகிறார்கள்’ என்ற கொடுமைகளை இங்கு விளக்கிக் கூறினார்கள். தாயையும், தந்தையையும் மரத்தில் கட்டி வைத்துவிட்டு, அவர்களது குழந்தையை அவர்கள் எதிரிலேயே கைவேறு காலவேறு—தலைவேறு முண்டம் வேறாக்கிக் கொன்றனர் சிங்கள வெறியர்கள் என்ற சோகச் செய்தியை உருக்கமாகக் கூறினார்கள் இங்கே.

“இப்படிப்பட்ட கொடுமைகளுக்கு இலங்கைவாழ் தமிழர்கள் ஆளாக்கப்படுகின்றனர் என்பதைக் கேட்டு, இங்கே, ஆட்சியில் உள்ள காமராசர் என்ன செய்தார்? ஒரு சொட்டுக் கண்ணீர் வடித்தாரா?—ஒரு கண்டன வார்த்தை தெரிவித்தாரா?—அவதியுறும் இலங்கைத் தமிழருக்கு அனுதாபமாவது கூறினாரா? இல்லையே! இன்று வரை கிடையாதே!

“டில்லியில் இருக்கிற நேரு சர்க்கார்தான் கண்டனக் குரல் கொடுத்தார்களா என்றால் அதுவும் இல்லை. இங்குள்ள காமராசரே வாய்திறக்காமலிருக்கும்போது, டில்லியில் இருப்பவர்கள் கவலைப்படுவர் என்று நாம் எப்படி எதிர்பார்ப்பது?

‘இந்த இலட்சணத்தில் உள்ள காமராசர் சர்க்கார், அந்த சர்க்காரை அமைத்துள்ள காங்கிரஸ் கட்சி இந்தக் கண்டனக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்று இங்கு சிலர் குறைப்பட்டுக்கொண்டார்கள். ஆளும்கட்சி, இலங்கைத் தமிழர்களுக்காக நடத்தப்படும் கூட்டத்திற்குத் தனது சக்தியையும் தரவில்லை என்று கூறினார்கள். நான் கூறுகிறேன்: இந்தக் காமராசர் சர்க்கார், ஒரு சக்தியற்ற சர்க்கார்; நாம் தந்த சக்தியையே காப்பாற்றிக்கொள்ளாத சர்க்கார் என்று.

“சில திங்களுக்கு முன்னால், இந்த இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்துச் சென்னை சட்டசபையில் கேள்விகள் எழும்பிய போது, ‘இந்த விவகாரங்களை விவாதிக்க இந்தச் சட்டசபைக்கு அதிகாரம் கிடையாது; வெளிநாடு ஒன்றில வாழும் தமிழர்களைப் பொறுத்தது என்பதால் சர்வதேச விவகாரமாகும்; இதனை விவாதிக்க டெல்லிக்குத்தான் அதிகாரம் உண்டு; நமக்குச் சக்தியில்லை’ என்று, காமராசர் சர்க்கார் சார்பில் பதில் கூறப்பட்டது. எனவேதான் நான் கூறுகிறேன், இந்த சர்க்கார், சக்தியற்ற சர்க்கார்—அதிகாரமற்ற சர்க்கார் என்று.

“இந்த சர்க்கார், தமிழர்கள் இலங்கையில் படும் அவதிகளைக் கண்டு வாளாவிருக்கிறார்கள் என்பதற்கு அதுதானே காரணம்.

“இலங்கைத் தமிழருக்கு இழைக்கப்படும் அநீதி கண்டு—கொடுமைகளைக் கண்டு நாம்தான் இங்கே துடிக்கிறோம். தி. மு கழகத்தைச் சேர்ந்த நாங்கள் மனவேதனைப்பட்டோம்—படுகிறோம்.

“இங்கே உள்ள சர்க்கார்—‘தமிழர் நலம் பேணுவதற்காக என்று இருக்கிறோம்’ என்று கூறுகிற சர்க்கார், இங்குள்ள தமிழர்களின் இரத்தமும் சதையுமாக, உற்றாரும் உறவினருமாக, அண்ணனும் தம்பியுமாக இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டு எதும் கூறாதவர்களாக இருக்கிறார்கள்.

“இந்த நிலை என்? தமிழரின் கதி இதுதானா? என்று கொதிப்படைந்த நாம் கேட்டோம்.

“இலங்கை யாழ்ப்பாணத்தில் உள்ள தேசிய சேவா சங்கத்தவர், தி. மு. கழகம் மேற்கொண்ட முயற்சிக்கு—காட்டிய அனுதாபத்திற்கு—ஆதரவிற்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

“இலங்கைத் தமிழரின் அவல நிலைகண்டு இங்கே தாயகத்தில் உள்ள நாம், உரிமையற்றவர்களாக இருப்பதால் எதும் செய்ய இயலாத நிலையில் நமது அனுதாபத்தை மட்டும் தெரிவிக்கிறோம்.

“இங்குள்ள சர்க்காருக்கும் ஏனையோருக்கும் நான் கூற விரும்புகிறேன். இந்த மாநில சர்க்காருக்கு முழுச் சுதந்திரம், உரிமைகள், அதிகாரங்கள் இருந்தால், இலங்கைத் தமிழரின் அவதி துடைக்க நாம் பாடுபட முடியுமே? அப்படி உரிமை தரப்பட்டால், ஆறு மாத காலத்திற்குள் இலங்கைத் தமிழர் அவதியுறும் நிலைக்கு நம்மாலே மாற்றம் தேடித் தர முடியும் என்பதை நான் கூற விரும்புகிறேன்.

“சிங்களத்தை மட்டுமே ஆட்சி மொழியாக்குவோம் என்று வெறியோடு கூறுவதுடன்; அதனை அமைதியான வழிகளில் எதிர்த்துப் போரிடும் தமிழரைத் தாக்கியும், கொலை செய்தும், கொள்ளையடித்தும் சிங்கள வெறியர் அட்டகாசம் செய்வதைக் கேட்க நமக்கு நெஞ்சு குமுறுகிறதே! ஆனால் இலங்கைவாழ் தமிழருக்குத் துரோகம் இழைக்கும் வகையில் தானே ஆட்சியாளர் நடந்து கொண்டிருக்கின்றனர்?

“இப்படி, தமிழர்களுக்கு எவர் எவர் துரோகம் இழைத்துள்ளார்களோ — இழைத்துக்கொண்டிருக்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் தக்கதோர் பாடம் கற்பிக்கத் தாயகத் தமிழர்களுக்குச் சீக்கிரமே ஒரு வாய்ப்புக் கிடைக்கவிருக்கிறது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, தமிழர் நலம் பேணாத—தமிழரைக் காட்டிக்கொடுக்கிற—தமிழருக்குத் துரோகம் இழைக்கிற—தமிழர் அவதி கண்டு வாளாவிருக்கிற வன்னெஞ்சர்களுக்கு மக்கள் தக்க பாடம் கற்பிக்க வேண்டும்.

“இன்று இங்கு கூடியுள்ள பல கட்சியினரும், இலங்கைத் தமிழர் அவதி துடைப்பதற்காக எதேனும் கூட்டு முயற்சியில் ஈடுபட்டால், தி. மு. கழகம் நிச்சயம் தன்னுடைய பங்கைச் செலுத்தக் காத்திருக்கிறது. அப்படிக் கூட்டு முயற்சி உருவாகாவிட்டால், வழக்கம்போல, கழகம் தன்னால் ஆனதை இயன்ற அளவு தனியாகவேனும் செய்யும் என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

“இலங்கைத் தமிழரின் நியாயமான போராட்டத்திற்கு கழகத்தின் மனப் பூர்வமான ஆதரவு என்றைக்கும் உண்டு.”

இலங்கைத் தமிழர் பிரச்சினை என்ன?

தான் ஆடாவிட்டாலும் சதை ஆடும் அல்லவா?

தோழர் ப. ஜீவானந்தம் விளக்குகிறார்

6—7—56 அன்று சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற பல கட்சிக் கூட்டத்தில், தோழர் ப. ஜீவானந்தம் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் :—

‘இலங்கையில் தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதியைக் கண்டிக்கவும், அவர்களுக்குத் தாய்த் தமிழகத்தில் உள்ள தமிழர்களின் தார்மீக ஆதரவைக் கூட்டவுமாக இந்தக் கூட்டம் நடைபெறுகிறது.

“இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்த இலங்கைத் தமிழ் மாணவர்களுடையவும், மயிலை இளைஞர் கழகத்துடையவும் முயற்சியை நான் முதற்கண் மனதாரப் பாராட்டுகிறேன்.

“இங்கே பல கட்சியினரும் கூடியிருக்கிறார்கள் ஆனால், ஆளும் கட்சியான காங்கிரஸ் கட்சியின் சார்பில் எவரும் கலந்து கொள்ளவில்லை. காங்கிரசாரின் ஒத்துழைப்பு இந்த விவகாரத்திற்குக் கிடைக்கவில்லை. இதனால் இலங்கைத் தமிழருக்குத் தாய்த் தமிழகம் தெரிவிக்கும் ஆதரவு ஒரே குரலாக இல்லை. இந்த நமது பலவீனத்தையும், குறைபாட்டையும் நாம் மனதில் கொள்ளவேண்டும்.

“ஆங்கிலம், இலங்கையின் ஆட்சி மொழி என்ற நிலை மாறவேண்டும் என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இல்லை—இருக்க நியாயமில்லை. ஆனால், இலங்கையில் சிங்களத்தைப்போலவே தமிழ் மொழியும், ஈடுஜோடியாக, இணையாக ஆட்சிமொழியாக வேண்டும் என்று தமிழர் கோருகின்றனர். இது நியாயமான கோரிக்கை என்பதை இலங்கையில் உள்ள கம்யூனிஸ்டுக் கட்சியினர் ஒப்புக்கொண்டு, தனிச் சிங்கள மசோதா இலங்கை மக்கள் சபையின் விவாதத்திலிருந்தபோது எடுத்துக் கூறியிருக்கின்றனர். எனவே, ‘இலங்கையில் தமிழ் மொழியும் சிங்களத்தைப்போல சமமான நிலையடைவதை சிங்களவர் அனைவருமே எதிர்க்கிறார்கள்’ என்று, ‘கூடைச் செங்கலும் பிடாரி’ என்பது போலப்பேசுவது கூடாது என்று கூறவிரும்புகிறேன்.

“எனவே இலங்கைத் தமிழருக்கு இன்றுள்ள பிரச்சினை, தமிழ் மொழிக்குச் சமநிலை மறுக்கப்படுகிறது என்பதும், இந்தச் சமநிலை வேண்டும் என்று கோருவதற்காகச் சிங்கள வெறியர்களால் தாக்கப்படுகிறார்கள் என்பதும்தான்.

“இந்தப் பிரச்சினைக்குத் தாயகத்தில் உள்ள நாம் செய்யக்கூடியதெல்லாம், இங்குள்ளவர் அனைவரும் ஒன்றாகக்கூடி இலங்கைத் தமிழர்களுக்கு நியாயம் வழங்குமாறு இலங்கை சர்க்காரைத் தூண்டுமாறு இந்திய சர்க்காரை வற்புறுத்தவேண்டும். அதுதான், இந்திய மக்கள், தானாடாவிட்டாலும் தன் சதையாடும்—என்பதால், தாம் இரத்தத் தொடர்புடையவர்கள்—என்பதால், குறிப்பாகத் தமிழர்கள்—செய்யக்கூடியதெல்லாம்.”

‘தமிழர் எந்த நாட்டில்தான் சுகமாக வாழுகின்றனர்?’

‘நாட்டுப் பற்றற்ற காமராசர் சர்க்கார் இலங்கைத் தமிழர் அவதி கண்டு துடிக்காதது ஆச்சரியமில்லை!’

டில்லி செய்ய வேண்டியது என்ன?

ஏ. வி. பி. ஆசைத்தம்பி முழக்கம்

6—7—56 அன்று சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற பல கட்சிக் கூட்டத்தில், தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி பேசியதின் சுருக்கம் :—

‘இலங்கையில் தமிழர்கள் கொடுமைப் படுத்தப்படுவதைக் கண்டிக்க இங்கே கூட்டம் நடத்துகிறோம். ஆனால் தமிழர்கள் எங்கேதான் சுகமாக வாழ்கிறார்கள்? குடியேறி வாழும் எந்த நாட்டில்தான் தமிழர்கள் கொடுமைப்படுத்தப்படவில்லை? அல்லது, தாய் நாட்டில் தான் தமிழர்கள் சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்களா என்றால் அதுவும் இல்லை.

“மலேயாவில் கணபதி என்ற தமிழ் இளைஞனைத் தூக்கிலிட்டார்கள். யார் கேட்டார்கள் அந்தக் கொடுமையை”

“பம்பாய், ஆமதாபாத் நகரங்களில், சொல்லொணாத் துயரங்களுக்கிடையில் கொடுமைகளை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர் பல்லாயிரம்; தமிழர்கள் எவர் அது குறித்துக் கவலைப்படுகிறார்கள்?

“இலங்கையிலே தமிழர்கள் அனுபவிக்கும் கொடுமைகளை, இங்கு எனக்கு முன் பேசியவர்கள் எடுத்துரைத்தனர்.

“இலங்கையில் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியாக வேண்டும் என்று கூறுகிறார்கள்; தமிழ் ஆட்சி மொழியாவதைக் கூடாதென்கின்றனர்.

“எந்த நாட்டில் ஒரு மொழி மட்டும் ஆட்சி மொழியாக இருக்கிறது—இலங்கையில் மட்டும் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியாக வேண்டுமென்பதற்கு?

“இந்தக் கூட்டத்தில் காங்கிரசார் கலந்துகொள்ளவில்லை என்றும், இங்குள்ள காமராசர் சர்க்கார் இலங்கைத் தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்தோ, தாக்கப்பட்ட கொடுமை குறித்தோ ஒரு வார்த்தையும் சொல்லவில்லை என்றும் கண்டனம் தெரிவித்தார்கள்.

‘இலங்கை சர்க்காரை இந்திய சர்க்கார் கேட்டால் என்ன சொல்லுவார்கள்? ‘உன் நாட்டில் இலட்சணம் என்ன? நீ மட்டும் இந்தியைத் திணிக்கவில்லையா?’ என்று இலங்கை சர்க்கார் கேட்பார்கள் என்ற அச்சத்தினாலும் தானே இங்குள்ள சர்க்கார் எதும் பேசாமலிருக்கிறது?

“காமராசர் சர்க்காருக்கு, நேரு சர்க்காரைத் தூண்ட வேண்டும் என்ற எண்ணம் எப்படி ஏற்படும்? தமிழ் மொழி வழங்கும் இந்த மாநிலத்திற்குத் ‘தமிழ்நாடு’ என்று பெயர் வையுங்கள் என்று நாம் கூறியுமே கேட்க மறுத்துவிட்டவர்கள்தானே இந்த மாநில சர்க்கார்? இவர்களுக்கு உள்ள தமிழ் உணர்ச்சி, தமிழ் நாட்டுப் பற்று அந்த அளவுதானே இருக்கிறது? இவர்கள் தமிழர்கள் என்பதிலேயே சந்தேகம் பிறக்கும்படியாகத்தானே நடந்துகொண்டிருக்கிறார்கள்? இலங்கையில் வாழும் தமிழர்கள் கொடுமைப்படுவதற்காக இவர்கள் வருந்துவார்கள் என்று எப்படி நாம் எதிர்பார்க்க முடியும்? இந்த நாட்டு மக்களின் நலனிலேயே அக்கரை இல்லாத இவர்கள், வெளிநாடுகளில் குடியேறி வாழும் இந்த நாட்டு மக்களின் நலனை எப்படிப் பேணப்போகிறார்கள்? இதையெல்லாம் இந்த நாட்டு மக்கள் தட்டிக்கேட்கவேண்டாமா?

“கடந்த காலத்தில், குட்டக் குட்டக் குனிந்ததினால்தானே, எதை எவர் சொன்னாலும் ஏன். எதற்கு என்று கேட்டுத் தெளிவு பெற்று நடந்துகொள்ளாமல் போனதினால்தானே தமிழினத்திற்கு இன்று இப்படி ஓர் அவல நிலை எங்கு சென்றாலும் ஏற்பட்டிருக்கிறது?

“நாம் இந்த நேரத்தில் இங்குள்ள மாநில சர்க்காரையும் டெல்லி சர்க்காரையும் கேட்கக் கூடியதெல்லாம் என்ன?

“ஒன்று, இலங்கைத் தமிழருக்கு நியாயம் கிடைக்க, தமிழ் மொழிக்கும் சிங்களத்தைப் போலவே சமநிலை கிடைக்குமாறு பண்டாரநாயகா சர்க்காரிடம் கோரவேண்டும்; அல்லது, இலங்கைத் தமிழர்கள் விருப்பம் தெரிவித்துள்ளதுபோல், அவர்கள் தனித்துச் சுதந்திரமாகத் தங்கள் விவகாரங்களைத் தாங்களே கவனித்துக்கொள்ளும் வகையில், தனி நாடாகச் சுதந்திரம் பெறுவதற்கு வழி செய்யுமாறு இலங்கை சர்க்காரைக் கேட்கவேண்டும்.

“இந்த இரண்டில் எதையேனும் ஒன்றை டில்லி சர்க்கார் செய்யுமாறு நாம் கேட்கிறோம். இவ்விரண்டையும் டில்லி செய்ய முடியாது என்று சொன்னால், மூன்றாவதாக ஒன்று கூறுவோம்; அதையேனும் அவர்கள் செய்யவேண்டும்.

“பாகிஸ்தான் பிரிந்த போதிலிருந்து இன்றுவரை, பாகிஸ்தானில் வாழப் பிடிக்காது ஓடிவரும் வடநாட்டுக்காரர்கள் பல இலட்சக் கணக்கானோருக்கும், இங்கே—இந்தியாவில் கஷ்டநஷ்டம் தந்து, புதிதாக வாழ்க்கை தொடங்க வழியும் செய்து தந்திருக்கிறது டில்லி சர்க்கார். அதைப்போல, ‘இலங்கையில், பெரும்பான்மையான சிங்களவரின் கொடுமைகளுக்கு ஆளாகி, பாதுகாப்பின்றி வாழ விரும்பாதத் தமிழர் அனைவரையும், இங்கே—தாயகத்தில் அழைத்துவந்து, வாழ்வு தரவேண்டும் டில்லி சர்க்கார்.

“இதில் எதையுமே டில்லி செய்யாமலிருந்தால், தென்னாட்டவரும்—குறிப்பாகத் தமிழரும், ‘இந்தியா’ என்ற அரசியல் அமைப்பில் ‘ஒன்றாகவே வாழுகின்றனர்’ என்ற நிலை வேகமாக மாறிவருவதற்கே அவர்கள் போக்கு மேலும் துணை செய்வதாக அமையும்”

சம்யுக்த மராட்டியம் கோரி டில்லி மக்கள்சபை முன் போராட்டம்

தொண்டர்களை அனுப்ப மராட்டிய சமிதி முடிவு

அகோலா, ஜூலை 8—

வருகிற 27-ந் தேதியன்று, மாநிலப் புனரமைப்பு மசோதா குறித்து விவாதிக்க மக்கள்சபை கூடும்போது, ஒரு பிரிவு 'சத்தியாக்கிரகிகளை அனுப்புவதென சம்யுக்த மகாராஷ்டிர சமிதி முடிவு செய்துள்ளதாக அச்சமிதியின் பொதுச்செயலாளர் எஸ் எம். ஜோஷி என்பார் தெரிவித்திருக்கிறார்.

சத்தியாக்கிரகிகள் குழுவில், எஸ். எம். ஜோஷி பம்பாய் மாநில சட்டசபை உறுப்பினர்கள், மற்றும் சில தலைவர்களும் அடங்கியிருக்கின்றனர்.

'சம்யுக்த மகாராஷ்டிர'த்தை அடைவதற்காகப் போராட வேண்டும் என்ற மக்களின் விருப்பத்தை அந்த 'சத்தியாக்கிரகிகள் எடுத்துக் காட்டுவார்கள் என்று அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் கூறப்பட்டிருக்கிறது. இதனிடையில், மேற்படி குழுவில் உள்ள சில முக்கியமான தலைவர்கள், மக்கள் சபை உறுப்பினர்களைக் கலந்து அவர்கள் முன்னிலையில் சம்யுக்த மகாராஷ்டிரப் பிரச்சினையைச் சமர்ப்பிப்பார்கள் என்று தெரிகிறது.

மகாராஷ்டிரம் முழுவதிலும் இந்தச் சத்தியாக்கிரக இயக்கத்தைத் தீவிரப்படுத்தவும், மகாராஷ்டிர மக்கள், தங்களுடைய நியாயமான—உரிமையான கோரிக்கையில் வெற்றிபெற நடத்தும் போராட்டத்தையொட்டி, லோகமானிய திலகரின் வாழ்க்கையையும், அவருடைய போதனைகளையும் மக்களுக்கு விளக்கிக்காட்டும் வகையில் ஊர்வலங்கள் போன்றவைகளையும் நடத்துவதின் மூலம் லோகமானிய திலகரின் ஆண்டு விழாக் கொண்டாடுவதென்றும் அச்சமிதியின் பொதுக்குழு முடிவு செய்திருக்கிறது.

மேலும், உத்தேச மகாராஷ்டிர மாநிலத்தின் மற்றப் பகுதிகளைப் போல் விதர்ப்பத்தையும் ஒரு அமைப்பு முறையின்கீழ் கொண்டு வருவது குறித்துத் தனது கவனத்தைச் செலுத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

மோசடிக்குப் பெயர்போன பம்பாயில்

புதுவகை மோசடி

பம்பாய், ஜூலை 9—

மோசடிகளுக்குப் பெயர்போன பம்பாயில் புதியவகை மோசடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்.

இந்த மோசடியை ஒட்டி 5 பேர் வரை கைது செய்யப்பட்டதாயும் இந்தக் கோஷ்டிக்கு ஒரு பெண் தலைவி என்றும் கூறப்படுகிறது.

ஒருவர் லட்சாதிபதியாக நடிப்பாராம். மற்றவர் அவரது செயலாளராக நடிப்பாராம். இந்த நடிப்பின் மூலம் ஸ்தாவரச் சொத்துக்கள் விற்போர் வாங்குவோரை ஏமாற்றி வந்தனராம்.

ஆடம்பரமான மாளிகை ஒன்றில் 'லட்சாதிபதி' இருப்பார். உதவி கோருவோர் அவரிடம் அழைத்துச் செல்லப்படுவார். அங்கு 'லட்சாதிபதி' சூதாட்டம் நடத்திக் கொண்டிருப்பார். உதவி நாடிச் செல்வோர் அதில் ஈடுபடுமாறு தூண்டப்படுவர். பணத்தைப் பறிகொடுத்தபின் விரட்டியடிக்கப்படுவர். இப்படி நடைபெற்றதாம் மோசடி.

சர்க்கரை உற்பத்தி

இவ்வாண்டு சர்க்கரை உற்பத்தியில் சென்ற ஜூன் மாதம் 30-ந் தேதிவரையிலும், இந்திய முழுமையிலுமுள்ள சர்க்கரை ஆலைகள் 18·45 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்தன இந்தத் தொகை, சென்ற ஆண்டில் உற்பத்தியான சர்க்கரையைவிட 2·62 இலட்சம் டன் அதிகமாகும். சென்ற ஜூன் மாதம் 30-ந் தேதி அன்று சர்க்கரை ஆலைகளில் 11·64 இலட்சம் டன் சர்க்கரை கையிருப்பில் இருந்ததாகத் தெரிகிறது.

தாழ்த்தப்பட்ட மக்கள் ஆலய நுழைவு

கீழ் நீதிமன்ற தீர்ப்புகளுக்கு எதிராக வாதிட முடிவு

புதுடில்லி, ஜூலை 9—

தாழ்த்தப்பட்ட மக்கள் ஆலயங்களில் பிரவேசித்தல் கூடாதெனத் தென்னாட்டிலுள்ள சில நீதிமன்றங்கள் அளித்துள்ள தீர்ப்புகள் செல்லத்தக்கவை அல்ல என தலைமை உயர்நீதி மன்றத்தில் வாதாடுவதென புதுடில்லியில் நடைபெற்ற பல்வேறு தாழ்த்தப்பட்டோர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய மாநாட்டில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இது சம்பந்தமாகத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள அகில இந்திய அரிசன லீக் தலைவர் யசத் அமீன் சந்த் என்பாருக்கு அதிகாரமளித்தும், ஆலயப் பிரவேசம், பொது இடங்கள், கிணறுகள் ஆகியவற்றை அரிசன மக்கள் பயன்படுத்துவது சம்பந்தமான இயக்கத்தை வருகிற அக்டோபர் 2-ந் தேதி முதல் தீவிரப்படுத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

மேலும், இந்திய மத்திய சர்க்கார் கட்டளையிடும்கூட, பெரும்பான்மை மாநிலங்கள் இன்னும் தீண்டாமையை ஒழிக்க எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளாதது குறித்தும் மாநாட்டில் வருத்தம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

காளி தேவிக்கு 4 வயதுப் பாலகன் காணிக்கை

ஏலூரு, ஜூலை 8—

தன்னுடைய 4 வயதுத் தம்பியை, காளி தேவிக்குப் பலியிட்டதாக ஒரு இளைஞர்மீது தொடரப்பட்ட வழக்கை விசாரித்த நீதிபதி எதிரியைக் கொலைக் குற்றத்திலிருந்து விடுதலை செய்துத் தீர்ப்பளித்திருக்கிறார்.

பீமவனம் தாலுகா, உப்புலூரு கிராமத்தைச் சேர்ந்த ஒய். இராமாவதாரம் என்பவர், கடந்த ஆண்டு நவம்பர் திங்கள் 18-ம் நாளன்று இரவு, வராந்தாவில் தூங்கிக் கொண்டிருந்த தம்முடைய தம்பியைத் தூக்கிவந்து, தன்னுடைய அறையிலுள்ள கட்டிலில் கிடத்திக் கழுத்தை நெரித்துக் கொன்றதாகவும், பின்னர், பிணத்தின் உடலைத் துண்டுதுண்டாக வெட்டி, அதே அறையில் வைக்கப்பட்டிருந்த காளிதேவிக்கு அர்ப்பணம் செய்ததாகவும் அவர்மீது சாட்டப்பட்டிருந்த வழக்கில் கூறப்பட்டிருந்தது.

இவ்வழக்கை விசாரித்த மேற்குக் கோதாவரி செஷன்ஸ் நீதிபதி டி. கிருஷ்ணம்மா என்பவர், இக்கொலை, ஏற்கனவே திட்டமிட்டுச் செய்யப்பட்டதல்ல என்றும், திடீரென ஏதோ ஒரு விபரீதமான சக்திக்குக் கட்டுண்டதால்தான் எதிரி இக்கொலையைச் செய்யநேரிட்டிருக்கிறது என்றும், அத்துடன், இச்சம்பவம் நடைபெறுகிறபோது எதிரிக்குச் சுயஉணர்வே இல்லாதிருந்திருக்கிறது என்றும், எதிரியின் பெற்றோர்கள் சிறிது கவனமாக இருந்திருந்தால் இவ்விதத் தவிர்த்திருக்கலாம் என்றும் கூறி, கொலைக் குற்றத்திலிருந்தும் விடுவித்துத் தீர்ப்பளித்திருக்கிறார்.

கூடத்தில், இ. பி. கோ. 474-ம் பிரிவுப்படி அவர்மீது மாநில சர்க்கார் வழக்குத் தொடரும்வரை அங்கு காவலில் வைக்கப்பட வேண்டுமென்றும் தீர்ப்புக் கூறியிருக்கிறார்.

இ. பி. கோ. 471ம் பிரிவுப்படி, எதிரி, ராசமகேந்திரபுரம் சிறைச்

கழகக் கூட்டம்

★

சென்னை :

திருவல்லிக்கேணி, வெங்கட்ரங்கம் பிள்ளை தெரு,

13—7—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :

சா. அப்பாதுரை

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்

என். ஜீவரத்தினம்

இன்னிசை: ஏ. விசுவநாதன்

—சென்னை 41-வது வட்டம்.

★

கல்லக்குடி :

16—7—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :

அ. தம்புசாமி

பேசுவோர் :

மு. கருணாநிதி

ஏ. பி. தர்மலிங்கம்

எம். எஸ். மணி

செங்குட்டுவன்

சென்னை 11-வது வட்ட தி. மு. க. பொது உறுப்பினர்கட்கு:

"12—7—56 மாலை 6 மணியளவில், சென்னை 11-வது வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர்கூட்டம் கூடி பொருளாளர், துணைச் செயலாளர், செயற் குழு உறுப்பினர் மூவர் தேர்ந்தெடுக்க இருப்பதால் உறுப்பினர் யாவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுகிறேன்,"

என்று, 11-வது வட்ட செயலாளர் தோழர் எஸ். எஸ். துரைசாமி அறிவிக்கிறார்.

சென்னையில் சம்பத் முழக்கம்

பல்லாயிரம் மக்கள் கலந்துகொண்ட சிறப்பான கூட்டம்

சென்னை, ஜூலை 10—

சென்னை ஆழ்வார்பேட்டை தி. மு. கழகத்தின் சார்பில் நேற்று மாலை 6-45 மணி அளவில், ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்திருந்தனர். தோழர் இரா. அழகழகன் தலைமை தாங்கினார்.

தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர் சம்பத் அவர்கள் இன்றைய அரசியல் நிலையை விளக்கியும், கழகக் கருத்துக்களை எடுத்துரைத்தும் சொற்பொழி வாற்றினர்.

அடுத்து தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் திருச்சியில் நடைபெற இருக்கும் தி. மு. கழக 2-வது மாநில மாநாடு, தமிழக அரசியலில் ஏற்படுத்தியுள்ள பெரும் திருப்பம் குறித்தும், கழகம் மேற்கொண்ட முடிவுகளைக் குறித்தும் பல்வேறு அரசியல் கட்சியினரும் பேசிவரும் முறை குறித்தும் விளக்கி அரியதோர்சொற்பொழிவு நிகழ்த்தினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின், நன்றி நவிலலுடன் கூட்டம் இரவு 10 மணிக்கு முடிவுற்றது. (ந-தி)

3000 டன் எடையுள்ள பால்பவுடர் வெண்ணை

இந்தியாவிற்கு அமெரிக்கர் அன்பளிப்பு

அமெரிக்காவில் உள்ள சுத்தோலிக்கக் கழகம், அமெரிக்க மக்கள் சார்பாக இந்தியாவிற்கு 3,000 டன் எடையுள்ள பால் பவுடர் மற்றும், வெண்ணெய் அனுப்பி வைத்திருக்கிறது.

'மான்டெரி' என்ற அமெரிக்கக் கப்பல் மூலம், இந்தச் சரக்குகள் பம்பாய் துறைமுகத்திற்கு கடந்த வாரம் வந்து சேர்ந்துள்ளன.

பம்பாயிலும் சென்னையிலும் உள்ள டில்லி சர்க்கார் உணவுக் கமிஷனர்களின் மூலமாகவே இவை அனுப்பப்பட்டிருக்கின்றன என்று தெரிய வருகிறது.

'சாது'க்கள் சமூக சேவையில் ஈடுபடுவாராம்

புதுடில்லி, ஜூலை 9—

பிருந்தாவனத்தில் அடுத்த திங்கள் முதல் சாதுக்களுக்கு சமூக சேவையில் பயிற்சியளிக்கப்படுமாம். சுமார் 50 'சாது'க்கள் கலந்து கொள்வார்களாம்.

'பாரத் சாது சமாஜ'த்தின் ஒழுக்க வளர்ச்சி இயக்கப் பிரச்சாரத்தில் இவர்கள் பயிற்சி பெறுவராம்.

லஞ்ச ஒழிப்பு, கலப்படத் தடை மதுவிலக்கு போன்றவற்றில் இவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுமாம்.

பீகார் மாநிலத்தில் லஞ்சத்தை ஒழிக்கும் முதல் நடவடிக்கையாக ஆக. 9-ந் தேதி லஞ்ச ஒழிப்பு நாள் கொண்டாடப்படும். இதில் பீகார் மாநில சர்க்காரும் கலந்து கொள்ளுமாம்.

கபார்கான் மீதுள்ள வழக்குகள்

பதின்மூன்றில் இரண்டு மட்டுமே விசாரிக்கப்படும்

லாகூர், ஜூலை 10—

எல்லைகாந்தி என்று பெருமையோடு அழைக்கப்படும், கான் அப்துல் கபார்கான் மீதுள்ள வழக்குகளை விசேட நீதிமன்றத்திலிருந்து மேற்கு பாகிஸ்தான் உயர் நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டும் என்று, சர்க்கார் செய்துகொண்ட மனுவை தலைமை நீதிபதி ஏற்றுக் கொண்டுவிட்டதாகவும், ஷப்பீர் அகமது என்ற நீதிபதி ஜூலை 23-ந் தேதி முதல், செஞ்சட்டைத் தலைவர் மீதுள்ள வழக்குகளை விசாரிப்பார் என்றும் கூறப்படுகிறது.

எங்கு விசாரித்தாலும் தமக்கு ஆட்சேபணை இல்லை என்று, கபார்கானின் வக்கீல் தெரிவித்திருக்கிறார்.

கபார்கான் மீதுள்ள 13 வழக்குகளில் இரண்டை மட்டும் வைத்துக்கொண்டு மற்றவைகளை கைவிட்டுவிடப்போவதாக சர்க்கார் வழக்கறிஞர் தெரிவித்திருக்கிறார்.

வருந்துகிறோம்

வடசென்னையில் தலை சிறந்த வணிகரும், நமது இயக்க அனுதாபியும், சிறந்த கொடை வள்ளலுமான திரு. பி. புன்னைவன (நாடார்) அவர்கள் தண்டையார் பேட்டையில் அவரது இல்லத்தில் நேற்று (9-7-56) பகல் 2 மணி அளவில் இயற்கை எய்தினர் என்ற செய்திகேட்டு தாங்கொணாத் துயரத்தில் ஆழ்ந்தோம்.

அவர், வடசென்னையில் வளர்ந்து ஓங்கி நிலை பெற்று வரும் கோ. சி. சங்கரலிங்க (நாடார்) உயர்நிலைப்பள்ளியை தோற்றுவித்தவர்களுள் முக்கியமானவர் என்பதுடன், அதன் நிர்வாகத் தலைவராகவும் இருந்து பணிபுரிந்து வந்தவர் என்பதே, கல்வி வளர்ச்சியில் அவர் காட்டிய அக்கறைக்கும் வள்ளல் தன்மைக்கும், சிறந்த எடுத்துக் காட்டாகும்.

அன்னாரது மறைவால் ஆழ்ந்த துயரத்திலாழ்ந்திருக்கும் அவரது மனைவியாருக்கும் பிள்ளைகளுக்கும் மற்றைய குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

—ஆசிரியர்

பாராட்டுக்கூட்டம்

11-7-56 மாலை 5 மணியளவில் சேலம் நகரவை உயர்தரப்பள்ளி மன்றத்தில், திருவள்ளுவர் கழகச் சார்பில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குத் தமிழ்மொழி ஆய்வாளராகச் செல்லும் தோழர் ஞா. தேவநேயப்பாவாணர் அவர்களுக்குப் பாராட்டுக்கூட்டமும், தேநீர் விருந்தும் தோழர் பி. ஹெர்பர்ட் சுந்தரம் தலைமையில் நடைபெறும்.

சொற்பயிற்சிக் கூட்டம்

11—7—56 மாலை 6 மணியளவில் சென்னை—சூளை ஊ. பு அ. சௌந்திரபாண்டியனார் நினைவு படிப்பக மனையில் 50-வது வார சொற்பயிற்சி நிறைவு விழாக் கூட்டம் படிப்பக உறுப்பினர் தோழர் டி. கே. சீனிவாசன் தலைமையில் நடைபெறும். 'அண்ணாவும் — அரசியலும்' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர். தேநீர் விருந்தும் அளிக்கப்படும்.

எல்லைக் 'கமிஷன்' உடனடியாக வேண்டும்

டில்லிக்கு சென்னை கோரிக்கை

சென்னை, ஜூலை 9—

சென்னை, ஆந்திர மாநிலங்களுக்கிடையே உள்ள எல்லைத் தகராறினைத் தீர்ப்பதற்கு உடனடியாக எல்லைக் கமிஷன் நியமிக்க வேண்டும் என்று சென்னை சர்க்கார், டில்லிக்கு எழுதி வருகிறார்களாம்.

இந்தத் தகராறைத் தீர்க்க, சர்க்கார் அவசியமான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நேற்று த. நா. கா. நிர்வாகக் குழு நிறைவேற்றிய தீர்மானத்தைக் காட்டிக் கேட்டதற்கு பதிலளிக்கும்போது தான் முதலமைச்சர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

நேரிடைப் பேச்சு மூலமோ, அல்லது இரு மாநில சர்க்காரும் ஒப்புக்கூடிய ஒருவரின் மத்தியஸ்தத்திற்கு விடவேண்டும் என்று சென்னை சர்க்கார் விரும்பியதும், ஆந்திர சர்க்கார், மாநில புதுஅமைப்பு விவகாரம் முடிந்த பின் இந்தத் தகராறு குறித்துக் கவனிக்கலாம் என்றும், தெரிவித்த பின்னரே, மத்திய சர்க்காருக்கு சென்னை எழுதுவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

குடும்பக் கட்டுப்பாடு

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சுமார் 2,800 குடும்பக் கட்டுப்பாட்டு நிலையங்கள் அமைக்கப்படும்.

திருமணம்

12-7-56 காலை 7 மணியளவில், சேலம் மாவட்ட ஆத்தூர் மணமகன் இல்லத்தில் தோழர் செ. அங்கமுத்து—தோழியர் செல்லம்மாள் திருமணம் தோழர் அ. நா. கோவிந்தராசலு தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஆ. சி. இசையழகன், டி வி அந்தியப்பன், மா. மணி ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.